# காங்கயம் நகராட்சி
# அவசரக் கூட்டம்

**காங்கயம் நகராட்சியின் அவசர கூட்டம் நிகழும் சுபகிருது வருடம் தமிழ் மாதம் பங்குனி 30 ஆம் நாள் ஆங்கில வருடம் 2023 ஏப்ரல் 13 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு காங்கயம் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றத்தீர்மானங்கள்.**

**பொருள் எண் : 1**

அரசாணை நிலை எண்.99, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.01.06.2010 ன்படி காங்கயம் பேரூராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 22.17 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 32147 ஆகும். மேலும், தற்போதைய மக்கள் தொகை 43125 ஆகும். இந்நகராட்சியில் மொத்தம் 18 வார்டுகள் உள்ளது. இதில் 225 தெருக்கள் அமைந்துள்ளது.

காங்கயம் நகராட்சியானது திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்நகராட்சியின் கிழக்குப் பகுதியில் வீரணம்பாளையம் கிராம ஊராட்சியும், மேற்கே சிவன்மலை கிராம ஊராட்சியும், வடக்கே ஆலாம்பாடி கிராம ஊராட்சியும், தெற்கே பொத்தியபாளையம் கிராம ஊராட்சியும் அமைந்துள்ளது.

இந்நகராட்சியின் எல்லையிலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் சிவன்மலை இந்து அறநிலையத் துறைக்கு சொந்தமான அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் தைப்பூசத் தேர்திருவிழா ஆண்டு தோறும் 3 நாட்கள் கொண்டாடப்படுகிறது. இத்திருவிழாவில் கலந்து கொள்வதற்காக சுமார் 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் அன்றைய நாட்களில் (Flooting Population) வந்து செல்கிறார்கள்.

ஈரோட்டிலிருந்து பழனி முருகன் கோவிலுக்கு செல்லவும், திருப்பூர் மற்றும் கோயமுத்தூரிலிருந்து திருச்சி மற்றும் கரூர் பகுதிகளுக்கு செல்லவும் இந்நகராட்சி வழியாகவே செல்ல வேண்டுடியுள்ளதால், இந்நகராட்சி மையப்பகுதியாக அமைந்துள்ளது. நகரமயமாதலின் விளைவாக திருப்பூரிலிருந்து பின்னலாடை பனியன் நிறுவனங்கள் காங்கயம் பகுதியில் பெருமளவில் உருவாகி தற்போது தொழிற்பேட்டை நகரமாகி வருகிறது.

இந்நகராட்சி எல்லைக்குள் அஞ்சலகம், காவல் நிலையம், மாவட்ட துணை கண்காணிப்பாளர் அலுவலகம், வட்டாட்சிர் அலுவலகம், பத்திரபதிவுத் துறை அலுவலகம், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைத்துறை அலுவலங்கள், பயணியர் மாளிகை, உயர்நிலைப்பள்ளி –1, நடுநிலைப்பள்ளி –2, தனியார் பள்ளிகள்–5, ஆரம்பப்பள்ளிகள்–5, அங்கன்வாடி மையங்கள்–12, நியாய விலைக் கடைகள்–11, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, தனியார் மருத்துவமனை–12, வங்கிகள் –16, வட்டார போக்குவரத்து அலுவலங்கள் அமைந்துள்ள பெரிய நகரமாகும்.

2023–2024 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் நகரமயமாதல் போன்ற காரணிகளை கருத்தில் கொண்டு காங்கயம் நகராட்சியினை இரண்டாம் நிலையிலிருந்து, முதல் நிலையாக தரம் உயர்த்தப்படுமென தெரிவிக்கப்பட்டதன்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10910/2023/எம்ஏ2, நாள்.06.04.2023 கடிதத்தில் உரிய கருத்துருவினை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, அரசாணை நிலைஎண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்சல் (தேர்தல்) துறை நாள்.30.08.2019ன்படி நகராட்சிகளின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நகராட்சியின் தரத்தினை வகைபாடு செய்தல் குறித்து வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

| வ. எண் | நகராட்சியின் நிலை | ஆண்டு வருவாய் |
|---|---|---|
| 1 | சிறப்பு நிலை | ரூ.15.00 கோடிக்கு மேல் |
| 2 | தேர்வு நிலை | ரூ.9.00 கோடிக்கு மேல் ரூ.15.00 கோடிக்குள் |
| 3 | முதல்நிலை | ரூ.6.00 கோடிக்கு மேல் ரூ.9.00 கோடிக்குள் |
| 4 | இராண்டாம் நிலை | ரூ.6.00 கோடிக்குள் |

மேற்கண்ட அரசாணையின் வழிகாட்டுதல்களின்படி, காங்கயம் நகராட்சியின் கடந்த மூன்றாண்டுகளின் வருவாய், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையின் ஆண்டு தணிக்கைச்சான்றுகளின் அடிப்படையில் கீழ்கண்டவாறு உள்ளது.

| வ. எண். | ஆண்டு | வருவாய் ரூ. (கோடியில்) |
|---|---|---|
| 1 | 2019-2020 | 14.50 |
| 2 | 2020-2021 | 13.08 |
| 3 | 2021-2022 | 15.05 |

மேற்கண்ட சூழ்நிலையில் காங்கயம் நகராட்சியின் கடந்த மூன்று நிதியாண்டுகள் வருவாய் ரூ.**6.00** கோடிக்கும் மேல் உள்ளதால் அரசாணையின்படி காங்கயம் நகராட்சியினை முதல் நிலை நகராட்சியாக தரம் வகைபாடு நிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்க பரிந்துரை செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**( ந.க.எண்.415 /2023/ சி1)**

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு உரிய கருத்துரு அனுப்பிட மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 496 |
| **நாள் :** | 13.04.2023 |
| **தீர்மானம் :** | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 2**

காங்கயம் நகராட்சியின் **2022–2023** ஆம் நிதியாண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**( ந.க.எண்.0633/2021/சி1)**

**<u>அலுவலகக்குறிப்பு</u> :** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 497 |
| **நாள் :** | 13.04.2023 |
| **தீர்மானம் :** | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 3**

காங்கயம் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம்/ ஒப்பந்ததாரர் பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு அரசாணை எண்:158 நாள்:02.11.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் **33552/2022**/EA2-SWM-10, நாள்:**10.01.2023**–ல் ஓராண்டுக்கு ரூ.**308.39** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி **27.03.2023**ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்காணும் ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| **1.** | M/s. SR Enterprises | மதிப்பீட்டை விட **–0.39**% குறைவு |
| **2.** | M/s.Our land Engineering Works | மதிப்பீட்டை விட **–0.27** % குறைவு |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**கோப்பு எண்: 0081/2020/H1**

**அலுவலகக்குறிப்பு:** மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **–0.39%** குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள M/s.SR Enterprises அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 498 |
| **நாள் :** | 13.04.2023 |
| **தீர்மானம் :** | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் : 4**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பள்ளி மாணவ மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்திற்கு உணவுக்கூடம் கட்டும் பணிக்கு ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற இந்தீர்மானம் எண்:468 நாள்:30.03.2023-ல் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி 10.04.2023ல் நடைபெற்ற டெண்டரில் கீழ்க்காணும் ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | எஸ்.சுப்பையா | மதிப்பீட்டை விட –0.04% குறைவு |
| 2. | ஆர்.வடிவேல் | மதிப்பீட்டை விட +6.19% அதிகம் |

மேற்கண்ட படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**கோப்பு எண்: 0348/2023/E1**

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **–0.04%** குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. இப்பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 499 |
| **நாள் :** | 13.04.2023 |
| **தீர்மானம் :** | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**ஒப்பம் திரு.ந.சூரியபிரகாஷ்**
**நகர்மன்ற தலைவர்**
**காங்கயம் நகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர்**
**காங்கயம் நகராட்சி**